Thiru R. PONNAPPA NADAR: Now that a motion of no-confidence has been received against the Deputy Speaker, may I know whether it would be brought for discussion in this session or any special session would be convened for that purpose.

Mr. DEPUTY SPEAKER: I would like to give an assurance that I would not follow the precedent that happened in the House regarding the no-confidence motion against the previous Speaker. I will definitely take up the issue after 14 days. I will have to consult the Hon. Leader of the House to fix the date only after the expiry of 14 days.

(2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.